


**11.06.2025**

## தலைப்பு செய்திகள்

1. நாட்டின் கட்டமைப்பு மேம்பாடு இலகுவான வாழ்க்கை முறையை உறுதி செய்துள்ளதோடு, வளத்தையும் அதிகரித்துள்ளது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. நவீன கட்டமைப்பு திட்டங்கள் தேசத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தி மக்களை இணைத்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

3. ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

4. தமிழ்நாட்டில் பருவமழையால் மின்விநியோகம் பாதிக்காத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

5. உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்பட்ட இறுதி போட்டியில், நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா - தென்னாப்பிரிக்காவை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

நீடித்த தொலைநோக்கு பார்வையுடன் அடுத்த தலைமுறைக்கான கட்டமைப்பை நம்நாடு முன்னெடுத்து செல்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

தற்சார்பு இந்தியாவிற்கான அடித்தளங்கள் இதன்மூலம் ஏற்படுத்தப்படுவதாக தமது சமூகவலைதள பதிவில் பிரதமர் எடுத்துரைத்தார்.

கடந்த 11 ஆண்டுகளின் கட்டமைப்பு புரட்சி தேசத்தின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ரயில்வே தொடங்கி நெடுஞ்சாலை வரை, துறைமுகத்திலிருந்து விமான நிலையங்கள் வரை இந்தியாவின் விரிவான கட்டமைப்பு இணைப்பு இலகுவான வாழ்க்கை முறைக்கு வழிகோலியதோடு நாட்டின் வளத்தையும் அதிகரித்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

நாட்டின் பொறியியல் நிபுணத்துவத்தால் கடந்த 11 ஆண்டுகளில் கட்டமைப்பு புரட்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்த புரட்சி மூலம் பாரத நாட்டை பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு, மறுகட்டமைப்பு செய்துள்ளதாக அமைச்சர் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

நவீன கட்டமைப்பு திட்டங்கள் தேசத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தி உள்ளதோடு மக்களையும் இணைத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்காரணமாக வர்த்தகமும், வணிகமும் இதுவரை இல்லாத அளவு பெருகியுள்ளதாக திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**எல். முருகன்**

2047-ம் ஆண்டு இந்தியா வல்லரசு நாடாக திகழ வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மகளிர் இளைஞர்கள், விவசாயிகள், ஏழைய மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றி, பாகிஸ்தானுக்கும் தீவிரவாதிகளுக்கும் தக்க பாடத்தை புகட்டி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் புதிய விமான நிலையங்கள், வந்தே பாரத் ரயில்கள் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளதையும்,

தமிழ்நாட்டில் 75 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

நாட்டின் முன்னேற்றம் பாதுகாப்பானதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தினார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், புதிய விமான நிலையங்கள், வந்தே பாரத் ரயில்கள், பல லட்சம் கோடி ரூபாய் செலவில் ரயில் நிலையங்கள், சாலைகள் போன்றவற்றால் நாடு வளர்ச்சி பெற்றிருப்பதாக கூறினார்.

நம்நாட்டின் மிகப்பெரிய மாற்றத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்தியஅரசு ஏற்படுத்தி இருப்பதாக குறிப்பிட்டார்.

தமிழகத்திற்கான ஜி.எஸ்.டி. நிலுவை தொகையை மத்திய அரசு முழுமையாக வழங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

கீழடியில் ஆய்வு நடத்த தேவைப்பட்டால் மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

## மத்திய அரசின் 11 ஆண்டுகாலம் சிறப்பு செய்தித்தொகுப்பு

...

மத்திய அரசு மேற்கொண்ட முனைப்புத் திட்டங்களால் நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பு பெரிய அளவிலான வளர்ச்சியை எட்டியுள்ளது.

2014-ம் ஆண்டை ஒப்பிடுகையில் நெடுஞ்சாலை கட்டமைப்பு மும்மடங்கு அதிகரித்துள்ளது.

பாரத் மாலா திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் கிலோ மீட்டர் நீள நெடுஞ்சாலைகள் கட்டமைக்கப்பட்டு பொருளாதார வழித்தடங்கள் உருவாக்கப்பட்டதால் தளவாட போக்குவரத்திற்கான செலவுகள் குறைந்தன.

45 ஆயிரம் கிலோ மீட்டர் நீள ரயில் வழித்தடங்கள் மின் மயமாக்கப்பட்டுள்ளன.

68 வந்தே பாரத் ரயில்கள் மூலம் 333 மாவட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

அம்ரித் பாரத் ரயில் நிலைய திட்டத்தின்கீழ் ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப் பட்டுள்ளன.

88 விமான நிலையங்கள் செயலாக்கம் பெற்றுள்ளன.

உலகளாவிய 3-வது பெரிய மெட்ரோ இணைப்பு நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

செனாப் மேம்பாலம், அடல் சுரங்கப்பாதை போன்றவை இந்தியாவின் பொறியியல் நிபுணத்துவத்திற்கு சான்றாக திகழ்கின்றது.

உற்பத்தி, இணைப்பு கட்டமைப்பிற்கு இந்நடவடிக்கைகள் அடித்தளமாக அமைந்ததோடு, வளர்ச்சியடைந்த பாரத பாதையை இவை முன்னெடுத்துச் செல்கின்றன.

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர் - வேளாண்**

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 15 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் 16 முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தார்.

159 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்ட பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 ஆயிரத்து 524 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்குகிறார்.

இன்றுமாலை சேலம் செல்லும் முதலமைச்சர் காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து நாளைகாலை தண்ணீரை திறந்துவைக்கிறார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் குழந்தை தொழிலாளர்

**உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்** நாளை கடைபிடிக்கப்படவுள்ள நிலையில் தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் இல்லா மாநிலமாக மாற்ற ஒருங்கிணைந்து செயல்பட முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

உதயநிதி

**தமிழ்நாட்டில் விடுபட்ட பெண்களுக்கு** மகளிர் உரிமைத்தொகை அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று துணைமுதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் சிறந்த மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு மணிமேகலை விருதுகளை இன்று வழங்கியபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு தேவையான கடனுதவிகள் உடனுக்குடன் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**சிவசங்கர்**

**தமிழ்நாட்டில் பருவமழை மற்றும் காற்றின்** காரணமாக மின் விநியோகம் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் மின்பகிர்மான கோட்ட அலுவலகத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், மாநிலம் முழுவதும் மின் கோட்டங்கள் பிரிக்கப்படுவதாக தெரிவித்தார்.

ஜெயங்கொண்டம் மின் கோட்டத்தின்கீழ் 10 துணை மின் நிலையங்கள் இயங்கும் என்றார் அவர்.

கோடை மழை மற்றும் பலத்த காற்று காரணமாக கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோவை மாவட்டங்களில் 500-க்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் அடியோடு சாய்ந்ததாகவும், மின் ஊழியர்கள் ஒரே நாளில் அதை சீரமைத்ததாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

**வெடிவிபத்து**

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே வடகரை பகுதியில் உரிமம் பெற்ற தனியார் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 3 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பேன்ஸி ரக பட்டாசுகள் தயாரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராத விதமாக மருந்துகலவையில் உராய்வு ஏற்பட்டதால் இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

**இதனிடையே விபத்தில் உயிரிழந்த 2 பேரின் குடும்பங்களுக்கு** தலா 4 லட்சம் ரூபாய் நிதியுதவி, பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபாயும்,

லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

**தமிழ்நாட்டில் கிராம உதவியாளர் பணியிடங்கள்** விரைவில் நிரப்பப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2 ஆயிரத்து 299 கிராம உதவியாளர் காலி பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

**பெரம்பலூர் மாவட்டத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ்** குடும்ப அட்டையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் கை ரேகை அல்லது கருவிழி பதிவு வரும் 31-ம் தேதிக்குள் நியாயவிலைக்கடையில் பதிவு செய்யுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ்பச்சாவ் தெரிவித்துள்ளார்.

இதற்கான சிறப்பு முகாம்கள் நாளையும், வரும் 14-ம் தேதியும் நடைபெறவுள்ளன.

**வேலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள கால்நடைகளுக்கான** சிறப்பு சுகாதார விழிப்புணர்வு முகாம்களை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

**லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் இன்று பிற்பகல் மூன்றரை** மணிக்கு தொடங்கும், உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்பட்ட இறுதி போட்டியில், நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா - தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

கோப்பையை தக்கவைத்து கொள்ளும் முயற்சியுடன் ஆஸ்திரேலியாவும்,

முதல்முறையாக கோப்பையை கைப்பற்றும் முனைப்புடன் தென்னாப்பிரிக்காவும் களமிறங்குகின்றன.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖